International Water Management Institute

# இலங்கை

iwmi.org/srilanka



## இலங்கையில் எமது பணிகள்

IWMI நிறுவனமானது, இலங்கை வாழ் மக்களின் விவசாயத்திற்கும், சுற்றுச்சூழல் கட்டமைப்புகளுக்கும் ஆதரவளிக்கும் நீர் முகாமைத்துவ தீர்வுகளை வழங்குவதன் மூலம், நாட்டின் காலநிலை மீள்தன்மை மற்றும் நிலையான பொருளாதார அபிவிருத்தியை வலுப்படுத்த அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றது. எமது பணியானது, நிலத்தடி நீரை வாழ்வாதாரமாகக் கொண்ட பகுதிகள் மற்றும் பாரம்பரிய அடுக்குக் குளக் கட்டமைப்புகளின் நீர் முகாமைத்துவ நடைமுறைகளில் நேர்மறையான தாக்கத்தை ஏற்படுத்துவதன் மூலம், சுற்றுச்சூழல் கட்டமைப்புகளின் சேவைகளை மேம்படுத்துதல், சதுப்புநில மேலாண்மையை சீரமைத்தல் மற்றும் பெண்கள், இளைஞர்கள் உள்ளிட்ட சமூகங்களை வலுப்படுத்துதல் போன்ற செயற்பாடுகளையும் உள்ளடக்கியுள்ளது.

தீவிரமடைந்து வரும் காலநிலை அபாயங்களுக்கு முகங் கொடுக்கும் வகையில், நிலைபேறான விவசாயத்தை ஊக்குவிக்கவும், வெள்ளம் மற்றும் வறட்சியை எதிர் கொள்வதற்கான ஒருங்கிணைந்த அணுகு முறைகளை மேம்படுத்தவும் அரசாங்கத்துடனும் ஏனைய பங்காளிகளுடனும் இணைந்து IWMI செயற்படுகிறது. நாடு முழுவதும் நீர் வளங்களைப் பாதுகாத்து, நீர் சார்ந்த பேரிடர்கள் பற்றிய முன்கூட்டிய எச்சரிக்கை மற்றும் நடவடிக்கை எடுக்கும் முறைகளை மேம்படுத்துவதன் ஊடாக உணவுப் பாதுகாப்பை வலுப்படுத்துவதும் வாழ்வாதாரங்களை மேம்படுத்துவதும் எமது பிரதான இலக்காகும்.

IWMI நிறுவனமானது, இலங்கையில் நிலவும் இத்தகைய அவசர பிரச்சினைகளுக்கு 1984 ஆம் ஆண்டு முதல் தரவுகள், சான்றுகளின் அடிப்படையிலான தீர்வுகளை உருவாக்கி வருகின்றது.

## இலங்கையில் நீர் முகாமைத்துவம்

இலங்கையின் நீர் முகாமைத்துவமானது, பருவப்பெயர்ச்சி மழை, அடர்த்தியான நதி வலைப்பின்னல்கள் மற்றும் நீர்ப்பாசனம் சார்ந்த அபிவிருத்தி பாரம்பரியம் ஆகியவற்றால் வடிவமைக்கப்பட்டுள்ளது. நாட்டின் 103 நதிப் படுகைகளில், 21 பிரதான படுகைகளே வருடாந்த மேற்பரப்பு நீரோட்டத்தின் சுமார் 80 சதவீதத்தை உருவாக்குகின்றன. ஒட்டுமொத்த நீர் இருப்பு போதுமானதாக இருப்பினும் வளங்கள் சமமாகப் பகிரப்படவில்லை. வருடாந்த மழைவீழ்ச்சியில் 60 சதவீதத்திற்கும் அதிகமான பகுதி மகா பருவத்தில் மட்டுமே கிடைக்கிறது. இதனால், பருவகால நீர் தட்டுப்பாடு அதிகமாகக் காணப்படும் உலர் மற்றும் இடைநிலை வலயங்களில் நீர் சேமிப்பிற்கான தேவையும் அதனை சார்ந்திருக்கும் நிலையும் அதிகரிக்கின்றது.

தேசிய நீர் நுகர்வில் விவசாயத் துறை முதன்மைப் பங்கு வகிப்பதுடன், சுமார் 80 சதவீதமான கிராமப்புற மக்களின் வாழ்வாதாரத்திற்கும் ஆதரவளிக்கிறது. பெரிய மற்றும் நடுத்தர நீர்ப்பாசனத் திட்டங்கள் மற்றும் அடுக்கடுக்கான குள அமைப்புகளாகக் காணப்படும் சுமார் 16,000 சிறிய குளங்கள் இணைந்து, ஏறத்தாழ 8.4 பில்லியன் கன மீட்டர் மேற்பரப்பு நீரை சேமிக்கும் திறனை வழங்குகின்றன. இவை மழைவீழ்ச்சியில் ஏற்படும் மாற்றங்களை சமநிலைப்படுத்தவும், வறட்சி நிலவும் காலப்பகுதியில் பயிர்ச்செய்கையை சாத்தியமாக்கவும், நிலத்தடி நீர் மட்டத்தை மீள நிரப்பவும் உதவுகின்றன. நிலத்தடி நீரானது நாட்டின் மக்கள் தொகையில் சுமார் 42 சதவீதமானோருக்குக் குடிநீரை வழங்குகிறது.

வெள்ளம் மற்றும் நிலச்சரிவுகளினால் இலங்கைக்கு ஏற்படும் அச்சுறுத்தல்கள் அதிகரித்து வருவதை, டித்வா சூறாவளி போன்ற காலநிலை சார்ந்த பேரிடர்கள் சுட்டிக்காட்டுகின்றன. நிறுவனங்களுக்கு இடையிலான ஒருங்கிணைப்பு, தரவு அடிப்படையிலான திட்டமிடல் மற்றும் காலநிலை மாற்றங்களை அடிப்படையாகக் கொண்ட தீர்மானங்களை மேற்கொள்ளல் போன்ற செயற்பாடுகளை வலுப்படுத்துவது நீண்ட கால நீர் பாதுகாப்பையும் மீளெழுச்சித் திறனையும் மேம்படுத்த உதவும்.

**60%** ஆன வருடாந்த மழைவீழ்ச்சி மகா பருவத்தில் நிகழ்கிறது. இது வறண்ட கால நீர் பயன்பாட்டிற்கான சேமிப்பை நம்பியிருப்பதை அதிகரிக்கிறது.

**16,000** சிறிய குளங்கள் சேர்ந்து உலர் மண்டல விவசாயம் மற்றும் நிலத்தடி நீர் செறிவூட்டலுக்கு உதவும் விரிவான அடுக்கு அமைப்புகளை உருவாக்குகின்றன.

# பணியாற்றும் பகுதிகள்

## வெள்ளம் மற்றும் வறட்சி முகாமைத்துவம்

வெள்ளம் மற்றும் வறட்சி முகாமைத்துவம் குறித்த IWMI இன் பணிகளானது, நிகழ்நேர தரவுகள், முன்கூட்டிய எச்சரிக்கை குறிகாட்டிகள் மற்றும் சமூகம் சார்ந்த பதிலளிப்பு நடவடிக்கைகளை இணைப்பதன் மூலம் பாதிப்புகளைத் தாங்கும் திறனை வலுப்படுத்துவதில் கவனம் செலுத்துகின்றன. உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக, முன்கூட்டிய எச்சரிக்கை மற்றும் நிதி உதவிகளை இணைத்தல் ஆகிய திட்டங்களை உள்ளடக்கிய கட்டமைப்புக்களை IWMI உருவாக்குகிறது. இதன் மூலம் ஆபத்து அதிகம் உள்ள மக்கள் தீவிர வானிலை நிகழ்வுகளுக்கு ஏற்ப தம்மை தகவமைத்துக் கொள்ளவும் அவற்றை குறைக்கவும் முடிகின்றது.

AWARE என்ற தளத்தின் ஊடாக, பேரிடர் அபாயங்களை முன்கூட்டியே கணித்து நிர்வகிக்கும் முறையை நோக்கி இலங்கை மாறுவதற்கு IWMI ஆதரவளிக்கின்றது. வெள்ளம் அல்லது வறட்சி ஏற்படுவதற்கு முன்னரே, அதற்கான ஆயத்த நடவடிக்கைகள் மற்றும் நிதி உதவிகளை ஆரம்பிப்பதற்கு, வானிலை முன்னறிவிப்புகள், சமூக-பொருளாதார குறிகாட்டிகள் மற்றும் பலதரப்பட்ட பங்காளர்களின் ஒருங்கிணைப்பு ஆகியவற்றை AWARE தளம் ஒன்றிணைக்கின்றது.





## நிலத்தடி நீர் முகாமைத்துவம்

நிலத்தடி நீர் முகாமைத்துவம் குறித்த எமது பணிகள், நிலத்தடி நீர் படுகைகளை கண்காணித்தல், நிர்வகித்தல் மற்றும் காலப்போக்கில் நிலைபேறாக பேணுதல் என்பவற்றை மேம்படுத்துவதில் கவனம் செலுத்துகின்றன. IWMI இன் ஆய்வு நடவடிக்கைகள் நிலத்தில் நீரின் நியாயமான பயன்பாடு, சுற்றுச்சூழல் அழுத்தத்தை குறைத்தல் மற்றும் காலநிலை தாக்கங்களுக்கு எதிராக மீண்டெழும் திறனை வலுப்படுத்தல் என்பவற்றுக்கு உதவும் நோக்கத்தில் செயற்படுத்தப்படுகின்றன.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் நிலத்தடி நீர் முகாமைத்துவத்தை மேம்படுத்துவதற்காக, மாகாண மற்றும் மத்திய அரசு அதிகாரிகளுக்கு IWMI ஆதரவளித்து வருகிறது. உப்புத்தன்மையை கண்காணிப்பதற்கான குடிமக்கள் அறிவியலாளர்களாக பாடசாலை மாணவர்களை ஈடுபடுத்துதல், நிகழ்நேர நிலத்தடி நீர் கண்காணிப்பு வலையமைப்புகளை விரிவுபடுத்தல் மற்றும் நிலத்தடி நீர் முகாமைத்துவத்திற்காக பலதரப்பட்ட பங்குதாரர்களை உள்ளடக்கிய ஒரு தளத்தை உருவாக்க வழிவகுத்தல் ஆகியவற்றின் மூலம், நிலத்தடி நீரின் மீள்தாங்குதிறனை மேம்படுத்துவதற்கான தரவுகள் அடிப்படையிலான தீர்மானங்களை மேற்கொள்வதற்கு IWMI உதவுகின்றது.

## காலநிலைக்கு உகந்த விவசாயம்

IWMI நிறுவனமானது சாமர்த்தியமான நீர் விவசாய முறைமை மற்றும் நில மேலாண்மையை மேம்படுத்துவதன் மூலம், இலங்கையில் நிலைபேறான விவசாயத்தை வலுப்படுத்த உழைக்கிறது. இதில் காலநிலை மாற்றத்தை தாங்கக்கூடிய நடைமுறைகளை உருவாக்குதல், முன்னோட்டம் செய்தல் மற்றும் களஆய்வு செய்தல் ஆகியவற்றுடன், டிஜிட்டல் விவசாயக் கருவிகளை மேம்படுத்துதல் மற்றும் பண்டைய நீர்ப்பாசன முறைகளுக்கு புத்துயிர் அளிப்பதற்கான ஆதரவை வழங்குதல் ஆகியவையும் உள்ளடங்கும். இது, விவசாயிகளின் காலநிலை மீள்திறனை மேம்படுத்துவதற்கும், புதிய கண்டுபிடிப்புகளுக்கான வாய்ப்புகளை விரிவாக்குவதற்கும் தனித்துவமான முக்கியத்துவத்தை வழங்குகின்றது.

IWMI மற்றும் அதன் பங்காளிகளால் உருவாக்கப்பட்ட GeoGoviya எனும் தரவு தொழிநுட்ப விவசாயத் தளம் (செயலி), 1.42 மில்லியன் அளவான விவசாயிகளுக்கு காலநிலை சார்ந்த ஆலோசனைகளை வழங்குகிறது. இது வானிலை மாற்றங்கள், நிலப் பயன்பாடு, மண்ணின் தன்மை, பயிர் ஆரோக்கியம் மற்றும் நீர் இருப்பு குறித்த நேரடியான தகவல்களை வழங்குகின்றது. இந்தத் தளமானது, விவசாயிகள் தமது குறிப்பிட்ட விவசாயத் தேவைகளுக்கேற்ப சரியான தீர்மானங்களை மேற்கொள்ள உதவுகின்றது.



# சதுப்புநிலம் மற்றும் மேல் நீரேந்துப் பகுதியின் பாதுகாப்பு

சதுப்புநிலங்களை பாதுகாப்பதற்கான எமது பணியானது, பரஸ்பரம், உறவுமுறை மற்றும் நன்றியுணர்வு ஆகியவற்றின் அடிப்படையில் மனிதர்களுக்கும் சதுப்புநிலங்களுக்கும் இடையிலான உறவை மாற்றியமைக்கின்றது. சதுப்புநிலங்களை உரிமைகளுடன் கூடிய உயிர்ப்புள்ள அமைப்புகளாக அங்கீகரிக்கும் சான்றுகளை IWMI உருவாக்குவதோடு, கொள்கை வழிமுறைகளின் முன்னோடியாக செயற்படுகின்றது. அத்தோடு, நிர்வாக சீர்திருத்தங்களையும் வடிவமைக்கிறது. நீர்மின் உற்பத்தித் திறனை பாதிக்கும் மண்சரிவுகள் மற்றும் மண்ணரிப்பு ஆகியவற்றிலிருந்து சரிவான நிலப்பகுதிகளை சீர்குலையாமல் பாதுகாப்பதற்கு, மேல் நீரேந்து பகுதிகளை பாதுகாப்பது மிகமுக்கியமாகும்.

கொழும்பில், சதுப்புநிலங்களின் உரிமைகளை நடைமுறைப்படுத்துவதற்கும், நகர்ப்புற சதுப்புநில சுற்றுச்சூழல் அமைப்புகளைப் பாதுகாப்பதற்கும் IWMI செயற்பட்டு வருகின்றது. சமூகத்தின் செயற்பாடுகளை தேசிய கொள்கையுடன் இணைப்பதற்கும், நீரேந்துப் பகுதிகளில் சமூகம் சார்ந்த சதுப்புநில முகாமைத்துவத்தை ஊக்குவிப்பதற்கும், பல்லுயிர் பெருக்கத்தைப் பேணி, 2.3 மில்லியன் மக்களின் வாழ்வாதாரம் மற்றும் நல்வாழ்வைப் பாதுகாப்பதை உறுதி செய்வதற்குமான ஒரு பொறிமுறையை IWMI உருவாக்கி வருகின்றது. மேலும், மேல் நீரேந்து பகுதிகளைப் பாதுகாப்பதற்கு, நில முகாமைத்துவ முறைகளை வடிவமைப்பதிலும் எமது முயற்சிகள் கவனம் செலுத்துகின்றன.






# சுழற்சி உணவு முறைகள்

சுழற்சிப் பொருளாதாரம் குறித்த IWMI நிறுவனத்தின் பணிகளைப் பொறுத்தவரை, கழிவு, உணவுற்பத்தி மற்றும் வளப் பாதுகாப்பு ஆகியவற்றிற்கு இடையிலான தொடர்புகளை வலுப்படுத்துகின்றன. கழிவுகளை பயனுள்ள பொருட்களாக மாற்றுவதற்கும், மாசடைதல் மற்றும் உணவு இழப்பினைக் குறைப்பதற்கும் நடைமுறை ரீதியான வழிகளை இவை கண்டறிகின்றன. இந்த அணுகுமுறையானது, தேசிய கொள்கைக்கு ஆதரவளிப்பதோடு, சிறு வர்த்தகங்கள் சுற்றுச்சூழலுக்கு உகந்த முறைகளைக் கையாள்வதற்கு வழிவகை செய்கின்றது. மேலும், இது நிலைபேறான மற்றும் மீள்திறன் கொண்ட முறையில் உணவு உற்பத்தியை உறுதிப்படுத்த உதவுகிறது.

கொழும்பு, காலி மற்றும் நுவரெலியா ஆகிய நகரங்களில், உணவுத் துறையில் சுழற்சிப் பொருளாதாரம் குறித்த IWMI நிறுவனத்தின் செயற்திட்டமானது, உற்பத்தி முதல் மொத்த விற்பனை வரையிலான உணவு இழப்புகளைத் தடுக்கவும், சில்லறை விற்பனை முதல் வீடுகள் வரையிலான உணவு விரயமாதலை குறைக்கவும் உதவுகின்றது. இத்திட்டத்தின் மூலம், சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் நிலையான வணிக மாதிரிகளை உருவாக்குவதற்கான ஆற்றலை IWMI மேம்படுத்துகிறது.

# நீர் முகாமைத்துவம்

நில மற்றும் நீர் முகாமைத்துவ கொள்கைகளை உருவாக்குவதற்கும் அவற்றை செயற்படுத்துவதற்கும் அரசாங்கத்திற்கு IWMI ஆதரவளிக்கிறது. தரவுகள் மற்றும் ஆதாரங்களுடன் நிர்வாகத்தை வலுப்படுத்துவதன் மூலமும், பல்வேறு பங்காளர்களிடையே திறன்களை மேம்படுத்துவதன் மூலமும், கொள்கை மட்டத்தில் காலநிலை மாற்றத்திற்கு ஏற்ப தம்மை தகவமைத்துக் கொள்ளும் திறனை மேம்படுத்துவதை எமது பணிகள் நோக்கமாகக் கொண்டுள்ளன.

இலங்கையின் தேசிய தகவமைப்புத் திட்டம் தொடர்பான ஆலோசனை சேவைகளின் ஊடாக, காலநிலை மாற்றத்தை தாங்கக்கூடிய வளர்ச்சியை மேம்படுத்துவதற்கான நாட்டின் திறனை IWMI வலுப்படுத்தியுள்ளது. இதில், நடுத்தர மற்றும் நீண்டகால திட்டமிடலுக்கு அவசியமான மிகச்சிறந்த காலநிலை தகவல்கள், வழிமுறைகள் மற்றும் கருவிகளை பயன்படுத்துவதற்கு தேசிய, துறைசார் மற்றும் மாகாண ரீதியான நிறுவனங்களுக்கு ஆதரவளிப்பது அடங்கும்.



## மாற்றத்தின் சுவடுகள்



# இலங்கையின் தகவமைப்புத் திட்டமிடலை காலநிலை முன்னறிவிப்புகள் வலுப்படுத்துகின்றன

இலங்கை பருவமழையை அதிகம் நம்பியிருப்பதால், காலநிலை மாற்றத்தினால் ஏற்படும் பாதிப்புகளுக்கு எளிதில் ஆளாகக்கூடிய நாடாக உள்ளது. மழைவீழ்ச்சி முறைகள் மாறி வருவதால், பழைய மழைப்பொழிவுத் தரவுகளை மட்டும் அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்படும் திட்டமிடல்கள், எதிர்கால அபாயங்களைச் சரியாகப் பிரதிபலிக்காமல் போகலாம்.

இலங்கையின் காலநிலைக்கு ஏற்றவாறு தம்மை தகவமைத்துக் கொள்ளும் முயற்சிகளுக்கு ஆதரவளிக்கும் வகையில், வளிமண்டலவியல் திணைக்களத்துடன் இணைந்து, புதிய காலநிலை முன்னறிவிப்புகளை IWMI உருவாக்கியுள்ளது. குறைந்த மற்றும் அதிகளவிலான நச்சுப்புகை வெளியேற்றச் சூழல்களில், மழைவீழ்ச்சி, வெப்பநிலை, ஈரப்பதம், காற்றின் வேகம் மற்றும் சூரியக் கதிர்வீச்சு போன்றவை அந்தந்தப் பகுதிகளில் எப்படி இருக்கும் என்பதை இந்த முன்னறிவிப்புகள் துல்லியமாகத் தெரிவிக்கின்றன. சில மாவட்டங்கள் எவ்வாறு கடுமையான வறட்சியை எதிர்கொள்ளக்கூடும் என்பதை ஆரம்பகட்ட பகுப்பாய்வுகள் சுட்டிக்காட்டுகின்றன.

இந்த முன்னறிவிப்புகள், விவசாயத்தை நம்பியிருக்கும் மக்களுக்காக சரியான திட்டங்களை வகுப்பதற்கு, திட்டமிடுபவர்களுக்கும் கொள்கை வகுப்பாளர்களுக்கும் உதவுகின்றன. அத்தோடு, மாகாண மட்டத்திலான திட்டங்களை தயாரிப்பதற்கும், காலநிலை மாற்றத்திற்கான நிதியொதுக்கீட்டை உரிய முறையில்  வழிநடத்துவதற்கும் இந்தத் தரவுகள் உதவுகின்றன. இதன் மூலம், சுற்றுச்சூழலைப் பாதுகாக்கவும், மக்களின் வாழ்வாதாரத்தை உறுதிப்படுத்தவும், தீவிரமடைந்து வரும் காலநிலை மாற்றத்தின் தாக்கங்களை எதிர்கொள்ளும் மீள்திறனை வளர்க்கவும் இலங்கைக்கு இது ஒரு முக்கிய வழிகாட்டியாக அமையும்.

# வறட்சியின் தாக்கத்தை குறைப்பதற்கு சமூகங்கள் முன்னெடுக்கும் தற்காப்பு நடவடிக்கைகள்

2024ஆம் ஆண்டில், அநுராதபுரம் மாவட்டத்தில் 100இற்கும் மேற்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த 300இற்கும் அதிகமானோர் இலங்கையின் முதலாவது சமூக மட்டத்திலான வறட்சி முன்னெச்சரிக்கை ஒத்திகையில் கலந்துகொண்டனர்.

இந்த ஒத்திகையில், முன்கூட்டியே கிடைக்கும் எச்சரிக்கை தகவல்களோடு, மக்களின் உயிர், வாழ்வாதாரம் மற்றும் இயற்கையை பாதுகாப்பதற்கான நடைமுறை ரீதியான பயிற்சிகளும் வழங்கப்பட்டன. சமூக உறுப்பினர்கள் ஒன்றிணைந்து வடிவமைத்ததன் மூலம் உண்மையான நிலைமைகளை பிரதிபலிக்கும் பருவகால வறட்சி எச்சரிக்கைகளை சரியான நேரத்தில் பெற்றுக்கொண்டதுடன், நீர் உட்கட்டமைப்புகளை பழுதுபார்த்து, நீர் சேமிப்பு மற்றும் உணவுப் பாதுகாப்பு நுட்பங்களையும் கற்றுக்கொண்டனர்.  அதேவேளை கால்நடை பாதுகாப்பு நடவடிக்கைகள் மற்றும் மூலோபாய ரீதியிலான நீர் பகிர்ந்தளிப்பு போன்ற நடைமுறைகள் பின்பற்றப்பட்டதோடு, நடைமுறைப்படுத்தக்கூடிய விவசாய நுட்பங்கள் குறித்தும் விவசாயிகள் கற்றுக்கொண்டனர்.

இந்த உருவகப்படுத்துதலானது, வறட்சியால் பாதிக்கப்படக்கூடிய பிராந்தியங்களுக்கு ஒரு புதிய முன்மாதிரியை அமைத்துள்ளது. உள்ளூர் நிலைமைகளை அடிப்படையாகக் கொண்ட ஆரம்பகட்ட செயற்பாடுகள், ஒருங்கிணைந்த நிர்வாகம் மற்றும் குடிமக்கள் அறிவியலால்  வழிநடத்தப்படும் சமூக ரீதியான தீர்வுகள் என்பன எவ்வாறு பேரிடர் ஆயத்தநிலையை மாற்றியமைக்க முடியும் என்பதை இது நிரூபித்துள்ளது.  இதனூடாக, பாதிப்பு ஏற்பட்ட பின்னர் நிவாரணம் வழங்குவதற்குப் பதிலாக, முன்கூட்டியே திட்டமிட்டு காலநிலை மீள்திறனை உருவாக்கும் ஒரு நிலையான அணுகுமுறையை ஏற்படுத்த முடியும் என்பதை இது வெளிப்படுத்தியுள்ளது.



## IWMI பற்றிய விளக்கம்

சர்வதேச நீர் முகாமைத்துவ நிறுவனம் (IWMI) என்பது ஒரு அபிவிருத்திசார் ஆராய்ச்சி அமைப்பாகும். இது அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளில் உள்ள நீர் தொடர்பான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும், அதற்கான தீர்வுகளை பாரியளவில் முன்னெடுப்பதற்கும், அரசாங்கங்கள், சமூக அமைப்புகள் மற்றும் தனியார் துறையினருடன் இணைந்து செயற்படுகிறது. தமது பங்குதாரர்களுடன் இணைந்து, நீர் மற்றும் நில வளங்களை நிலைபேறான முறையில் பயன்படுத்துவது குறித்த ஆய்வுகளை IWMI மேற்கொள்கிறது. அத்தோடு, விவசாயம், சுற்றுச்சூழல் பாதுகாப்பு, காலநிலை மாற்றம் மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய பொருளாதார வளர்ச்சி ஆகியவற்றுக்காக நீர் முகாமைத்துவ தீர்வுகளை செயற்படுத்துவதற்கு அவசியமான அறிவு, தொழில்நுட்பக் கருவிகள், பயிற்சிகள் மற்றும் கொள்கை ஆய்வுகளையும் வழங்குகின்றது. இலங்கையின் கொழும்பை தலைமையகமாகக் கொண்டுள்ள IWMI, CGIAR அமைப்பின் ஓர் ஆய்வு மையமாகும். இது 17 நாடுகளில் அலுவலகங்களையும், 55இற்கும் மேற்பட்ட நாடுகளில் பணியாற்றும் விஞ்ஞானிகளின் உலகளாவிய வலையமைப்பையும் கொண்டுள்ளது.

எம்மை
**தொடர்பு கொள்ள**
இலங்கை (அலுவலகம்)
iwmi.org/contact/sri-lanka-office

International Water Management Institute

CGIAR RESEARCH CENTER

வெளியிடப்பட்டது: மே 2026